

விருதுநகர் மாவட்டம் , அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள 172 பயனாளிகளுக்கு ரூ .6.02 கோடி மதிப்பில் வீடுகள் கட்டுவதற்கான உத்தரவுகளை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் பயனாளிகளுக்கு வழங்கினார் .




சிவகங்கை மாவட்டம் கல் லல் ஒன்றியம் குன்றக்குடி ஊராட்சி மயிலாடும்பாறையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி யின் கீழ் ருபாய் 9.00லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள கலையரங்கத்தை கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் , பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி, கல்லல் மேற்கு ஒன்றிய செயலாளர் குன்றக்குடி சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வடக்கு ஒன்றியம் ஒடுவன்பட்டி, மேலப்பட்டி கிராமங்களில் இருந்து பல்வேறு மாற்றுக் கட்சிகளில் இருந்து விலகி, 20 பேர், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் ஆர்.புகழேந்தி ஏற்பாட்டில் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். இந்நிகழ்வில் அ.கணேசன், ம.பூமிநாதன், சிவபுரிசேகர், ஆ.பாஸ்கரன், ந.அம்பலமுத்து, கதிர்வேல், அலாவுதீன், செந்தில்கிருஷ்ணன், ஆர்.சிவக்குமார், சிவக்குமார், குடோன்மணி, தேசிகன் பிரிஞ்சி சரவணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.




நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க பொறியாளர் அணி ஒன்றிய,நகர, பேரூர் நிர்வாகிகளுக்கான நேர்காணல் நிகழ்வு நெல்லை கிழக்கு மாவட்ட அலுவலகத்தில் (அம்பாசமுத்திரம் சாலை) நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் தலைமை செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன் முன்னிலையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் மாநில பொறியாளரணி துணைச் செயலாளர் ராஜவர்மன் பங்கேற்று நேர்காணல் நடத்தினார்.உடன் மாநில தொழிலாளரணி துணைச் செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன்,மாவட்ட துணைச் செயலாளர் மைக்கேல், மாவட்ட அணி அமைப்பாளர்கள் அருணன் (பொறியாளர் அணி) பிரேம் ஆனந்த் (துகவல் தொழில்நுட்ப பணி) உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



திராவிட மாடல் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் தலைமையை ஏற்று நெல்லை மாநகர அ.ம.மு.க. மாவட்ட அவைத் தலைவர் சாமுவேல் பிரின்ஸ் அக்கட்சியில் இருந்து விலகி நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளரா இரா.ஆவுடையப்பன் முன்னிலையில் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். உடன் மாநில தொண்டரணி துணைச் செயலாளர் ஆவின் ஆறுமுகம், விவசாயத் தொழிலாளரணி துணைச் செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், நாங்குநேரி முன்னாள் ஒன்றிய செயலாளர் பாலச்சந்தர் ஆகியோர் உள்ளனர்.



தேனி தெற்கு மாவட்டம் புதுப்பட்டி பேரூராட்சி தலைவர் நகர் மன்ற துணை தலைவர் சுனோதா செல்வக்குமார் மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள் முன்னிலையில். கம்பம் காந்திஜி பூங்கா வளாகத்தில் கம்பம் நகராட்சி சார்பில் யோகா மற்றும் கராத்தே பயிற்சி மையத்தை கம்பம் நகர் மன்ற தலைவர் வனிதா நெப்போலியன் துவக்கி வைத்து சிறப்பித்தார். நிகழ்ச்சியில் நகராட்சி உதவி பொறியாளர் சந்தோஷ்குமார், நகராட்சி சுகாதார அலுவலர் அரசகுமார், நகர் மன்ற உறுப்பினர்கள் விருமாண்டி, சாதிக் அலி, ராஜா, விஜயலட்சுமி, ரோஜாரமணி, அன்புகுமாரி, அபிராமி, வீரூசிக்கம்மாள், சகிதா பானு . மற்றும் நகராட்சி அதிகாரிகள்நகர முக்கிய பிரமுகர்கள், பயிற்சியாளர் கங்குலி, பொதுமக்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.



விருதுநகர் மாவட்டம் சிவகாசி வட்டம் ஆணைக்குட்டம் அணையில் ரூ .28.20 கோடி மதிப்பில் புணரமைப்பு பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வி.ப.ஜெயசீலன் , தலைமைமில் , விருதநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் , சிவகாசி மாநகராட்சி பேயர் சங்கீதா இன்பம் ஆகியோர் முன்னிலையில் , நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார் . உடன் வர்த்தக அணி வனராஜ், சிவகாசி மாநகரச் செயலாளர் உதயசூரியன், விருதுநகர் நகரச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.தனபாலன், துணைச் செயலாளர் ராமமூர்த்தி, சிவகாசி பகுதிச் செயலாளர் காளிராஜன், பொதுக் குழு உறுப்பினர் சுதாகர், இளைஞர் அணி கார்த்தி, முன்னாள் ஒன்றிய தலைவர் சுமதி ராஜசேகரன், ஒன்றிய துணைச் செயலாளர் குருசாமி ஆகியோர் இருந்தனர்.



கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உசிலம்பட்டியில் பி.கே.மூக்கையா தேவர்க்கு மணிமண்டபம் அமைக்கப்படும் என சட்டசபையில் அறிவித்ததை தொடர்ந்து அதற்கான இடங்களை மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி நேரில் ஆய்வு செய்தார். உடன் மாவட்ட ஆட்சியர் சங்கீதா, மாவட்ட வருவாய் அலுவலர் அன்பழகன், மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன், கழக நிர்வாகிகள் வக்கீல் ஆர்.பாலாஜி, எஸ்.ஓ.ஆர்.தங்கப்பாண்டியன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழகத்தினர், அதிகாரிகள் பங்கேற்றனர்.



மதுரை கிழக்கு தொகுதி, மதுரை மாநகராட்சிக்குட்பட்ட மிளகரனை, ஆனையூர் உள்ளிட்ட பகுதிகளில் 10கோடி ரூபாய் மதிப்பீட்டில் 19 புதிய முடிவுற்ற திட்டப் பணிகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மதுரை மாநகராட்சி ஆணையர் சித்ரா விஜயன், மாவட்ட வருவாய் அலுவலர் க.அன்பழகன், துணை மேயர் நாகராஜன், மண்டல தலைவர் வாசுகி சசிக்குமார் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் திரளாக பங்கேற்றனர்.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பாக இளைஞர் அணி அமைப்பாளர் சௌந்தர்ராஜன் ஏற்பாட்டில் மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ தளபதி எம்.எல்.ஏ., மாநில உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் பொன். முத்துராமலிங்கம் ஆகியோர் பொதுமக்களுக்கு நீர் மோர் வழங்கினர். உடன் கழக நிர்வாகிகள் ஒச்சு பாலு, முகேஷ், ஷர்மா, அறிவு நிதி, ராதாகிருஷ்ணன், புண்ணிய மூர்த்தி, முத்து , கணேஷ், வட்டக் கழக செயலாளர் காத்தவராயன், ராஜேஷ் கண்ணா, மேலமடை பிரேம், சுப்ரீம் ராஜா மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



தேனி தெற்கு மாவட்டம் கம்பம் ஒன்றியம் புதுப்பட்டி பேரூர் உத்தமபுத்துஓட்டை மட பகுதி கால்வாய் சீரமைப்பு பணி சுமார் ரூ.12 கோடி அளவில் பராமரிப்பு பணியை தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. ஆய்வு செய்தார். உடன் கம்பம் ஒன்றிய செயலாளர் தங்கபாண்டி, புதுப்பட்டி பேரூர் செயலாளர் பார்த்திபன், துணை செயலாளர்கள் மரியராஜ், ஜெய பாண்டியன், அயலக அணி மாவட்ட அமைப்பாளர் ரவி, வழக்கறிஞர்அணி துணை அமைப்பாளர் ஈஸ்வரன், உதவி செயற்பொறியாளர் மயில்வாணன், பொறியாளர் பிரேம் ராஜ்குமார் மற்றும் கழக முன்னோடிகள் விவசாயிகள் கலந்து கொண்டனர்.